www.padippakam.com

# நுண்கலைப் பாடத்திட்டம்

தமிழர் கலையகம் டோட்முண்ட்

Thamilar Kalaiyagam Dortmund

## குரலிசை

## பரத நாட்டியம்

## இசை – தாளவாச்சியம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

M.A. Rejenold
Bochumer Str. 67
45661 Recklinghausen
Tel: 02361-62543

# நுண்கலைப் பாடத்திட்டம்

## குரலிசை
## பரத நாட்டியம்
## இசை – தாளவாச்சியம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பாடத்திட்டம்

## குரலிசை – நாட்டியம் – வாச்சியம்

### *முன்னுரை*

தமிழிசை மிக மிகப் பழமையானது. அதன் கீர்த்தி சொல்லிலடங்காது. கிறித்துவுக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியர் என்ற புலவர் பெருமான் ஆக்கித்தந்த "தொல்காப்பியம்" என்னும் நூலில் இசையைப் பற்றிய ஆழ்ந்த கருத்துக்களை தெளிவாகக் காணலாம். சாத்தனார் அவர்களின் கூத்த நூலிலும் தமிழரிசை பற்றி அதிகமாக, விரிவாக கூறியிருப்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. இன்னும் எத்தனையோ சான்றுகள் உண்டு. 2800 ஆண்டுகளுக்கு முன் ரோமாபுரி மன்னன் 7ம் சாலமென் காலத்திலேயே ரோமாபுரியில் கடல்கடந்து வணிகம் செய்து வந்தனர் தமிழர். அதுவும் தமிழ்மொழியிலேயே விலைபேசி பொருட்களை விற்றனர். அரிசி, மயில்தோகை, சந்தனம், இஞ்சி, மாங்காய், வெற்றிலை இன்னும் அனேக தமிழ்ச் சொற்கள் அங்குபரவின. இன்று ரைஸ், டோகை, சான்டல், ஜின்ஜர், மாங்கோ, பெற்றல், என உருமாறி ஐரோப்பிய மொழிகளான ஆங்கிலம், யேர்மன், பிரஞ்ச் ஆகியவற்றின் அகராதியில் புகுந்து கொண்டன.

தமிழர், இவ்வாறு இசையிலும், இயலிலும், நாடகயியலிலும் மேம்பட்டு விளங்கியதுடன், பொன்னும், பொருளும், குன்றா அறிவும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்தனர். ஆனால் அன்னியரின் சூழ்ச்சியை உணரத் தவறிவிட்டனர். அதன் விளைவு படிப்படியாக அன்னியர் ஆட்சியிலும் அதிகாரத்திலும் பலகாலம் தமிழர் வாழவேண்டியதாயிற்று. தமிழும், தமிழிசையும் உருமாற்றத்திற்கு ஆளாயின. தமிழிசை தமிழர் பெருமையிலிருந்து பறிபோய், மாற்றார் ஆதிக்கத்தில் அடக்கமானது. வடமொழியான சமசுகிருதச்சொற்களின் திணிப்பு பெருகியது. இயல்தமிழ்ச்சுவடிகள் அனல்வாதத்திலும், புனல் வாதத்திலும் பலி கொள்ளப்பட்டன. சிற்றிசை, பேரிசை, இசைநூல், இசைநுணுக்கம், பஞ்சமரபு, தாளசமுத்திரம், ஆளத்தி அமைப்பு போன்ற எத்தனையோ இசைநூல்களும், கூத்துவரி, உளநூல், சயந்தம், செயிற்றியம் விளக்கத்தார் கூத்து, நாட்டியவிளக்கம் ஆகிய நாடக நூல்களும் அழித்தொழிக்கப்பட்ட கொடுமையை எண்ணும்போது நெஞ்சம் புண்ணாகிறதே. அக்கால நாடகவியல்நூல்கள் பெரும்பாலும் தமிழிசைச் செவ்விகளை முதன்மையாகக் கொண்டவை. தமிழ் மக்களின் அன்பு, அரவணைக்கும் தன்மை, பணிவு, வருவிருந்து பேணுதல் போன்ற நற்பண்புகளே அவர்களின் எதிரிகளாயின. இதையெல்லாம் அறிந்து சிலிர்த்தெழுந்த தமிழர்கள் செயற்பட முயன்றவேளை ஆதிக்கம் கொண்டிருந்த ஆரியரால் அடக்கப்பட்டனர். நீறுபூத்த நெருப்பாக எம்மவர் உணர்வுகள் மேலோங்கத் தொடங்கிவிட்டது. தமிழரின் பெருமை, உயர்வு, தொன்மை எல்லாவற்றையும் உணர்ந்து உரிமைப்போர் தொடுக்கத் தொடங்கிவிட்டனர். தமிழை இதய பீடத்தின் அரியணைதனில் ஏற்றத் துணிந்தனர். தமிழரின் சுயநிர்ணயப் போராட்டம், தமிழர்கள், தம்மைச் சரியான வகையில் அடையாளம் காட்டும் துணிவிற்கு ஊக்கம் தந்தள்ளது.

படிப்பகம்

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 1

### செயன்முறை

**இசைவடிவங்கள்**

1. சரளிவரிசைகள்
2. இரட்டைவரிசைகள்
3. வலிவுமண்டிலவரிசைகள்
*(இவையாவும் மாயாமாளவகவுளை இராகத்தில் 3 வேகங்களிலும் இசைக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்)*

ஏறுநிரல், இறங்குநிரல் இசைத்த பின்னரே இசைவடிவங்களை ஆரம்பிக்க வேண்டும்

| | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|
| 4. இலகு தமிழ்க்கீர்த்தனைகள் (விரும்பிய தாளத்தில்) | 1 | 1 |
| 5. திருப்புகழ் (விரும்பிய தாளத்தில்) | 1 | 1 |
| 6. தேவாரம் | 1 | 1 |
| 7. ஒன்றுமிரண்டும், நாலன்தனி ஆகிய தாளங்களின் அணியடுக்குகளை மூன்று வேகங்களிலும் இசைத்தல் | 2 | 2 |
| 8. இலகுகீதங்கள் | 2 | 2 |

### அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)

1. ஏழு சுரங்களின் தமிழ்ப் பெயர்களும் அவற்றின் சமசுகிருதப் பெயர்களும்.
2. தாள அசை, தாளச்சீர்கள், அலகு, துரிதம், அரைத்துரிதம் தாள இயக்குமுறை மூன்று வேகங்கள் பற்றிய விளக்கம்.
3. ஏறுநிரல், இறங்குநிரல் பற்றிய சுருக்க விளக்கம்.
4. திருப்புகழ், தேவாரம் பாடியோரின் பெயர்கள்.

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 2

### செயன்முறை
**இசைவடிவங்கள்**

| | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|
| 1 ஏழு அணியடுக்குகளை மூன்று வேகங்களில் இசைத்தல் | . | . |
| 2 தாட்டுவரிசைகள் | 3 | 2 |
| 3 இலகுகீதங்கள் (இருவேகங்களில்) | 5 | 4 |
| 4 தானவர்ணம் | 1 | 1 |
| 5 ஜதிசுரம் | 1 | 1 |
| 6 கீர்த்தனங்கள்: ஒன்றுமிரண்டும், நாலன்தனி, நாலும் ஈரிரண்டும் தாளங்களில் | 3 | 2 |
| 7 சர்வசமயக்கீர்த்தனை (பொதுமறைக்கீர்த்தனை) | 1 | 1 |
| 8 தேவாரம் | 1 | 1 |
| 9 திருப்புகழ் | 1 | 1 |
| 10 நாட்டார்பாடல் | 1 | 1 |

*குறிப்பு:*
சரளிவரிசைகளில் ஏதேனும் ஒன்றை மூன்று வேகங்களிலும் அகாரமாக இசைத்தல்
**ஏறுநிரல், இறங்குநிரல் இசைத்த பின்னரே இசைவடிவங்களைப்பாட ஆரம்பிக்க வேண்டும்**

### அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)
1. ஏழு தாளங்களின் பெயர்கள்.
2. ஏழு தாளங்கள், அவற்றில் வரும் அணியடுக்குகள் பற்றிய அறிவு.
3. வகைபெறும், வகைபெறா சுரங்கள் பற்றிய தெளிவு.
4. தாளம், தாளஎழுத்து, நடை ஆகியவற்றிற்கான சுருக்கவரைவு
5. ஏழுதாளங்களையும் நாலன்நடையில் (சதுஸ்ர நடையில்) கையால் போட்டுக் காட்டும் திறன்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 3

செயன்முறை

**இசைவடிவங்கள்**

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1. | இலக்கண கீதம் | 1 | 1 |
| 2. | தானவர்ணம் இருவேகங்களில் | 2 | 2 |
| 3. | சுரஜதி | 1 | 1 |
| 4. | ஜதிசுரம் | 2 | 2 |
| 5. | கீர்த்தனைகள்: ஒன்றுமிரண்டும், மூன்றும் ஈரிரண்டும், நாலும் ஈரிரண்டும் ஆகிய தாளங்களில் | 4 | 3 |
| 6. | சர்வசமயக்கீர்த்தனை அல்லது நல்லொழுக்கக் கீர்த்தனை | 2 | 1 |
| 7. | தேவாரம் | 2 | 2 |
| 8. | நாட்டார் பாடல் | 2 | 2 |
| 9. | திருப்புகழ் | | |

*குறிப்பு:*
ஏதேனும் ஒரு அணியடுக்கை மூன்று வேகங்களிலும் அகாரமாக இசைத்தல்,
ஏறுநிரல், இறங்குநிரல் இசைத்த பின்னரே இசைவடிவங்களை ஆரம்பிக்க வேண்டும்
அடிப்படைச்சுருதி, ஆண்சுருதி, பெண்சுருதி, ஒன்று, ஒன்றரை, ஐந்து, ஐந்தரை.
கட்டைச்சுருதிகள் சுருதிப்பெட்டி, தம்புரா, சுரப்பேழை ஆகிய அரும்பதங்கள் பற்றிய அறிவு.

### அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)

1. கீதம் பற்றிய இலக்கணம்
2. நாற்சுரப்பண், ஐஞ்சுரப்பண், அறுசுரப்பண் பற்றிய தெளிவு
3. இன்னொலி, சுருதி, சுரம்
4. அயல்சுரம், கலப்புப்பண்
5. சுரஜதி, ஜதிசுரம் பற்றிய பொது அறிவு
6. நாலும் ஈரிரண்டு தாளத்தை (ஆதி) மூன்றன், நாலன், ஐந்தன், ஏழன் நடைகளில் (திஸ்ர, சதுஸ்ர, கண்ட, மிஸ்ர) தாளச்சொல்லோடு கையால் போட்டுக்காட்டும் திறன்.

### பார்த்து இசைத்தல் (தாளக்கட்டுப்பாடில்லாதது)

1. மாயாமாளவகவுள
2. சங்கராபரணம்
3. மலகரி
4. அம்சத்தொனி

### துணைப்பாடம்:
1. சரளிவரிசைகள் அனைத்தும்
2. அணியடுக்குகளில் ஏதேனும் ஒன்றை மூன்று வேகங்களிலும் இசைத்தல்
3. இலகுகீதம் 1

### இசையியல் (கேள்வித்தாள்)

1. அரும்பத விளக்கம்
   இசை, இன்னொலி, சுருதி, சுரம், மண்டிலம், தாளம், முன்னர்பாகம், பின்னர்பாகம், அரைச் சுரங்கள், நிறைச் சுரங்கள், ஏறுநிரல், இறங்குநிரல்.
2. ஏழு சுரங்களின் தமிழ்ப்பெயர்களும் அவற்றின் சமசுகிருதப் பெயர்களும், வகைபெறும் சுரங்கள், வகைபெறாச் சுரங்கள் பற்றிய விளக்கம்.
3. 12 சுரத்தானங்கள் உண்டாகும் விதம்.
4. மாயாமாளவகவுள, சங்கராபரணம், அரிகாம்போதி, மலகரி, அம்சத்தொனி, பிலகரி ஆகிய இராகங்களுக்கு ஏறுநிரல், இறங்குநிரல், சுரத்தானங்கள், மேள இலக்கம் பற்றிய விளக்கம்.
5. பின்வரும் இசை வடிவங்களுக்கு இலக்கணம்.
   கீதம், திருப்புகழ்.
6. இசைக்குறியீடுகள் பற்றிய அறிவு



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 4

**செயன்முறை**

**இசைவடிவங்கள்**

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1 | தானவர்ணம்: ஏழும் ஒன்றும் இரண்டும்தாளத்தில் | 1 | 1 |
| 2 | தானவர்ணம் : நாலும் ஈரிரண்டும் தாளத்தில் | 3 | 2 |
| 3 | கீர்த்தனைகள்: ஒன்றுமிரண்டும், நாலும் ஈரிரண்டும், மூன்றும் ஈரிரண்டும் போன்றதாளங்களிலும், நாலும் ஈரிரண்டும் தாளத்தில் மூன்றன் நடையிலும் | 7 | 6 |
| 4 | சர்வசமயக்கீர்த்தனை அல்லது வாழ்வியல், நல்லொழுக்கக் கீர்த்தனைகள் | 2 | 1 |
| 5 | கிருதி | 1 | 1 |
| 6 | தேவாரம் | 3 | 2 |
| 7 | திருப்புகழ் | 3 | 2 |
| 8 | நாட்டார்பாடல் | 3 | 3 |
| 9 | ஈழத்தவர் இயற்றிய ஈழத்தைப்பற்றியபாடல் | 1 | 1 |
| 10 | விரும்பிய அணியடுக்கை (சங்கராபரணம், அரிகாம்போதி) இரண்டு வேகத்தில் இசைத்தல் | | |

*குறிப்பு:*
நாலும் இரண்டும் இருநாலும், ஏழொன்றிரண்டு ஆகிய தாளங்களின் அணியடுக்குகளில் ஒன்றை மூன்று வேகங்களிலும் அகாராமாக இசைத்தல்.
ஏறுநிரல், இறங்குநிரல் இசைத்த பின்னரே உருப்படிகளை (இசைவடிவங்களை) ஆரம்பிக்க வேண்டும்.

**அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)**

1. வேகநெறி, பிறழ்பண், உள்ளாளச்சுரம் விபரம்.
2. ஏறுநிரல், இறங்குநிரல் பாடும்போது பண்களை அடையாளங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறல். (அகாரமுறையிலும், சுரமாகவும்)
3. இலகு தொடுவை பாட, பண்களை அடையாளங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறல்.
4. ஒத்தளவுடன் பாடலைப் பாட தாளங்களைக் காணல்.
5. தாளம், ஒத்தளவு பற்றிய விளக்கம், 5 அலகுவகைகளின் தெளிவு.

**பார்த்து இசைத்தல்**

1. கல்யாணி 2. கரகரப்பிரியா 3. பிலகரி 4. சுத்தசாவேரி

**துணைப்பாடம்:**

1. ஏழொன்றிரண்டு தாளத்தில் அமைந்த அணியடுக்குகள் மூன்று வேகங்களில்.
2. தாட்டு வரிசைகள் இரண்டு
3. கீதம் இரண்டு
4. இலகு தமிழ்க் கீர்த்தனை அல்லது இலகு திருப்புகழ்

**இசையியல் (கேள்வித்தாள்)**

1. அரும்பத விளக்கங்கள் பிறழ்சுரம், பிறழ்முடிபுச்சுரம், அறுசீர்கள், திருப்பு, இயலும் இசையும், தாழ்சுருதி, முத்தாயிசுரம், கம்பிதப்பண், அனுபல்லவி.
2. நாற்சுரப்பண், ஐஞ்சுரப்பண், அறுசுரப்பண; முழுவிபரம் எடுத்துக்காட்டுகளுடன், பெரும்பண், கிளைப்பண், இடைவிட்டபண், பிறழ்பண், பிறவரல்பண், *"நி"* சுரமுடிவுப்பண், *"த"* சுரமுடிவுப்பண், *"ப"* சுரமுடிவுப்பண் பற்றியத் தெளிவு எடுத்துக்காட்டுகளுடன்.
3. சமஎடுப்பு, சமமற்றஎடுப்பு, முன்னரெடுப்பு, பின்னரெடுப்பு பற்றிய முழு அறிவு
4. பின்வரும் இசைவடிவங்களின் இலக்கணங்கள்.
   தானவர்ணம், ஜதிசுரம், கீர்த்தனை, தேவாரம்.
5. இலகுகீதத்திற்கும் இலக்கணகீதத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.
6. கீழ்வரும் பண்களின் இலக்கணங்கள்
   மாயாமாளவகவுள, பிலகரி, காம்போதி, அம்சத்தொனி.
7. இயலிசைப் புலவர்கள் வரலாறும் இசைத்தொண்டும்.
   முத்துத்தாண்டவர், புரந்தர தாசர்.

www.padippakam.com

# குரல் இசை — கருவி இசை
# பருவம் 5

## செயன்முறை

### இசைவடிவங்கள்

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1 | இராகமாலிகை வர்ணம் | 1 | 1 |
| 2 | தானவர்ணம் | 4 | 3 |
| 3 | கீர்த்தனைகள் இதில் சாபுதாளவகைளில் ஒன்றும் **ஒன்றுமிரண்டும், நாலன்தனி போன்ற தாளங்களிலும் நாலும் ஈரிரண்டும் தாளத்தில் மூன்றன்நடையிலும்** (முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாபிள்ளை, தியாகராஜசுவாமிகள், முத்துசுவாமிதீட்ஷகர், சியாமாசாஸ்த்திரி, சுவாதிதிருநாள் மகாராஜா, கோபாலகிருஷணபாரதி, பாபநாசம்சிவன்) | 9 | 8 |
| 4 | சர்வசமயக்கீர்த்தனை அல்லது பொதுக் கீர்த்தனை | 4 | 3 |
| 5 | கிருதி | 1 | 1 |
| 6 | கீழ்வேகக்கிருதி (இரட்டை அசைமுறையில்) | 1 | 1 |
| 7 | நாட்டார் பாடல் | 4 | 3 |
| 8 | ஈழத்தவர் இயற்றிய ஈழப்பாடல் | 2 | 2 |
| 9 | திருப்புகழ் | 4 | 3 |
| 10 | தேவாரம் | 4 | 3 |
| 11 | புராணம் (சேக்கிழார் இயற்றியது) | 1 | 1 |
| 12 | சுப்பிரமணிய பாரதி பாடல் | 1 | 1 |
| 13 | விரும்பிய பண்ணிற்குக் காட்டாளத்தி (ஆலாபனை)யுடன் கற்பனை சுரம்பாடுதல் | | |

*குறிப்பு:*
அணியடுக்கு ஒன்றை மூன்று வேகங்களிலும் அகாரமாக இசைத்தல்.
மாணவர்பயிலும் வாச்சியத்திற்கு சுருதிசேர்க்கத் தெரிந்திருத்தல்.

## அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)

1. இசைவடிவங்கள் இயற்றியவர் பற்றித்தெரிந்திருத்தல் (பிறந்த ஆண்டு, முத்திரை)
2. ஆளத்தியில் அயல்சுரம்வரும் தொடுவையைக் காணல்.
3. 35 தாளங்கள்பற்றிய அறிவு

## பார்த்துப்பாடல்:
1. வராளி, 2. சகானா, 3. ஆனந்தபைரவி, 4. சக்கரவாகம்

## துணைப்பாடம்
1. ஜதிசுரம் அல்லது சுரஜதி 1
2. இலக்கணகீதம் 3
3. கீர்த்தனை ஒன்றுமிரண்டும், நாலும் ஈரிரண்டும் தாளங்களில் 2

## இசையியல் (கேள்வித்தாள்)
1. அரும்பத விளக்கங்கள்: அருகிசைப்பண், பிறைப்பண், நிறைப்பண், மித கம்பிதப்பண், வழக்கிழந்த தொடுவை, தனிச்சாயல்ப்பண், நீள்கம்பிதச்சுரம், பெரும்பயன்சுரம், நட்புப்பண், அனைத்துசுரநிறுத்தப்பண்.
2. இசைப் பாடல்கள் எழுதும் முறையில் உபயோகிக்கப்படும் சகல குறியீடுகளும் அறிந்திருத்தல்.
3. பின்வரும் இசைப் பாடல்களின் ஒற்றுமை வேற்றுமை கிருதி, கீர்த்தனை.
4. கீழ்வரும் பண்களின் இலக்கணம்
   கீரவாணி, பந்துவராளி, கல்யாணி, சுத்தசாவேரி, ஆபோகி, கேதாரம்
5. புல்லாங்குழல் வாச்சியத்தின் படம் வரைந்து விளக்கி அதன் கலை நுட்பங்களை எடுத்துக்காட்டி விரிவாக எழுதுக.
6. இயலிசைப் புலவர்களின் வரலாறும் இசைத் தொண்டும்
   தியாகராஜசுவாமி, பாபநாசம் சிவன், சுந்தர மூர்த்திநாயனார்.
7. 16 சுரத்தானங்கள் உண்டாகும் முறை இரட்டைப் பேருடன் விளங்கும் சுரத்தானங்கள்.
8. 35 தாளங்கள் உண்டான விபரமும் ஒவ்வொரு தாளங்களின் அசைவுகளும் சீர்களும்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 6

### செயன்முறை

**இசைவடிவங்கள்**

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1 | தானவர்ணம் ஏழொன்றிரண்டு தாளத்தில் | 1 | 1 |
| 2 | வர்ணம்: ஈரைந்து ஈரிரண்டும் தாளத்தில் | 1 | 1 |
| 3 | தானவர்ணம் | 5 | 4 |
| 4 | கீர்த்தனைகள் இதில் சாபுதாளவகைளில் ஒன்றும் **ஒன்றுமிரண்டும், நாலன்தனி போன்ற தாளங்களிலும் நாலும் ஈரிரண்டும் தாளத்தில் மூன்றன் நடையிலும்** (முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மாரிமுத்தாபிள்ளை, தியாகராஜசுவாமிகள், முத்துசுவாமிதீட்ஷகர், சியாமாசாஸ்த்திரி, ஸ்வாதிதிருநாள் மகாராஜா, கோபாலகிருஷ்ணபாரதி, பாபநாசம்சிவன்) | 10 | 9 |
| 5 | சர்வசமயக்கீர்த்தனை அல்லது நல்லொழுக்கக் கீர்த்தனைகள் | 5 | 4 |
| 6 | கிருதி | 2 | 2 |
| 7 | கீழ்வேகக்கிருதி (இரட்டை அசைமுறையில்) | 2 | 1 |
| 8 | பதம் (முத்துத்தாண்டவர், கவிகுஞ்சபாரதி, ஊத்துக்காடு வெங்கடசுப்பையர், கனம் கிருஸ்ணய்யர்) | 1 | 1 |
| 9 | இராகமாலிகைக் கீர்த்தனை | 1 | 1 |
| 10 | ஜாவளி | 1 | 1 |
| 11 | விருத்தம் | 1 | 1 |
| 12 | தேவாரம் | 5 | 3 |
| 13 | திருப்புகழ் | 5 | 4 |
| 14 | சுப்ரமணியபாரதியார் பாடல்கள் | 2 | 1 |
| 15 | நாட்டார் பாடல் | 5 | 4 |
| 16 | ஈழத்தவர் இயற்றிய ஈழத்தைப்பற்றிய பாடல்கள் | 3 | 2 |

17 விரும்பிய கீர்த்தனைக்கு சமமற்ற எடுப்பில் ஐந்து நிமிடங்களுக்குக் குறையாமல் கற்பனைசுரம் இருவேகங்களில் இசைக்க வேண்டும்.
18 விரும்பிய பண்ணிற்கு சிறு ஆளத்தி இசைத்தல்
19 பார்த்துப் பாடலுக்குரிய பண்கள்: கேதாரகவுளை, சண்முகப்பிரியா, மத்தியமாவதி, தன்யாசி

### அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)

1. அரும்பத விளக்கங்கள்
(நொடிநேரநிறுத்தற்சுரம், மித அழுத்த உள்ளாளப்பண், மென்சுரம், பெருவழக்குச்சுரம், நட்புப்பண்)
2. எடுப்புகள் பற்றிய அறிவு.
3. இசைவடிவங்களின் வகை பற்றிய அறிவு

### துணைப்பாடம்
1. தானவர்ணம் 1
2. இலக்கணகீதம் 1
3. நாலுமிரண்டும் நாலும், ஈரைந்தும் ஈரிரண்டும் ஆகியதாளங்களை (அரிக்காம்போதி, சங்கராபரணம்) அகாரமாக இசைத்தல்.

### இசையியல் (கேள்வித்தாள்)

1. அரும்பத விளக்கம்: விடியல்பண், உள்ளாளமற்றப்பண், சிறப்புத்தொடுவை, மென்சுரம், கதம்பகப்பண், முப்பொழுதுப்பண், மண்டிலம்.
2. பின்வருவன பற்றிய விரிவான விளக்கமும் இயற்றியவர்கள் பெயர்களும்
கிருதி, ஜாவளி, தில்லானா, அலாரிப்பு.
3. 72 மேளப்பெரும்பண்களும் அவற்றின் விளக்கங்களும்.
4. கன, நய, பொதுப்பண் விளக்கம் எடுத்துக்காட்டுக்களுடன்.
5. கீழ்வரும் பண்களுக்கான இலக்கணம்
பைரவி , சக்ரவாகம், பூபாளம், இந்தோளம், ஆனந்தபைரவி, கமாசு, சாரங்கா, கரகரப்பிரியா.
6. வீணையின் உருவமைப்பை வரைந்து அதன் உறுப்புகளின் பயன்பாட்டை விரிவாக எழுதவும்.
7. இயலிசைப் புலவர்கள் வரலாறும் இசைத் தொண்டும்
அருணாச்சலக்கவி, முத்துச்சாமிதீட்சதர், நாவுக்கரசர்.
8. இசைவளர்ச்சியில் கணனியின் பங்கு.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

# குரல் இசை — கருவி இசை
# பருவம் 7

## செயன்முறை

### இசைவடிவங்கள்

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1 | அடதாளவர்ணம் (தமிழில் 1) | 2 | 2 |
| 2 | தானவர்ணம் (தமிழில் 3) | 7 | 6 |
| 3 | கீர்த்தனைகள் | 12 | 11 |
| | **(ஏழும் ஒன் றும் இரண்டும், ஒன் றுமிரண்டும் தாளங்களிலும் நாலும் ஈரிரண்டும் தாளத்தில் ஐந்தன் நடையிலும்)** | | |
| 4 | சர்வசமயக்கீர்த்தனை அல்லது பொது கீர்த்தனைகள் | 6 | 5 |
| 5 | கிருதி | 3 | 2 |
| 6 | சௌக்ககால கிருதி | 3 | 2 |
| 7 | தில்லானா | 1 | 2 |
| 8 | ஜாவளி | 2 | 1 |
| 9 | விருத்தம் (விரும்பிய பிறழ்ப்பண்) | 1 | 1 |
| 10 | பஞ்சரத்தினம் (தியாகராஜசுவாமிகள்) | 1 | 1 |
| 11 | பண் மாலிகைக் கீர்த்தனை | 1 | 1 |
| 12 | ஈழத்தவர் ஆக்கிய செவ்விசைப்பாடல்கள் அல்லது வடிவங்கள் | 4 | 3 |
| 13 | நாட்டார் பாடல் | 6 | 5 |
| 14 | தேவாரம் (சங்கதிகள் அமைந்த) | 4 | 3 |
| 15 | திருப்புகழ் | 6 | 4 |
| 16 | ஆண்டாள்பாசுரம் அல்லது ஆழ்வார்பாசுரம் (திவ்வியபிரபந்தம்) | 1 | 1 |

17 பார்த்துப் பாடலுக்குரிய பண்கள்:
*தன்யாசி, இந்தோளம், சிறீரஞ்சனி, நாட்டைக்குறிஞ்சி*

18 கீழ்க்காணும் பண்களில் 2 பெரும்பண்களுக்கும் 2 கிளைப்பண்களுக்கும் ஆளத்தி, கற்பனைசுரம் (1ம், 2ம் வேகத்தில்) பாடத்தெரிந்திருத்தல்:
*பிலகரி, மத்தியமாவதி, மோகனம், அம்சத்தொனி, சங்கராபரணம், கல்யாணி*

## அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)

1. அரும்பதவிளக்கம் (மாறுமுதல் நிறைப்பண், பன்மொழிக்கிருதி, மகுடஇயல், சுரப்பாவியல், கிளைப்பண்)
2. ஆளத்தி பாடத் தெரிவு செய்யும் பண்களின் நிறுத்தற்சுரம், உயிர்ச்சுரம், சிறப்புச்சுரம், ஆகியவற்றை அறிந்திருத்தல்.
3. ஈழத்தில் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களின் பெயர்கள்.

## துணைப்பாடம்

1. கிருதி 1    2. திருப்புகழ் 2    3. தானவர்ணம் 2    4. கீர்த்தனை 3

## இசையியல் (கேள்வித்தாள்)

1. தாளத்தின் 10 வகை இயக்கங்கள் பற்றி விளக்கம்.
2. கற்பனை இசை, கற்பிக்கும் இசை ஆகியன பற்றிய விளக்கமும் கற்பனைச் சுரம் பாடும் முறையும்.
3. பின்வரும் இசை வடிவங்களின் பொதுப் பொருண்மைகளும், யாப்பமைதிகளும்.
   பதம், திருப்புகழ், தேவாரம், திவ்வியபிரபந்தம், தெம்மாங்கு, கும்மி, தாலாட்டு, ஓடப்பாட்டு
4. நாட்டார் இசை பற்றிய முழு விபரம்.
5. இசைப் பாக்களுக்கு சுரதாளக் குறியீடுகள் எழுத அறிந்திருத்தல்.
6. இயலிசைப் புலவர்கள் வரலாறும், இசைத்தொண்டும்
   விபுலானந்தர், சியாமாசாத்திரி, ஆபிரகாம் பண்டிதர், சுப்ரமணிய பாரதி, சுத்தானந்த பாரதி, பட்டணம் சுப்பிரமணியய்யர், திருஞானசம்பந்தர், மாரிமுத்தாபிள்ளை.
7. இசைவாச்சியங்களின் அமைப்பிலக்கணம் வயலின், மிருதங்கம், தம்பூரா.
8. இராக இலக்கணம்.

| | | | |
|---|---|---|---|
| 1. தோடி | 2. சண்முகப்பியா | 3. லதாங்கி | 4. ஹேமவதி |
| 5. நடபைரவி | 6. கேதாரகௌள | 7. ஆந்தோளிகா | 8. ஜெகன் மோகினி |
| 9. மலயமாருதம் | 10. வசந்தா | 11. சிம்மேந்திரமத்தியமம் | 12. தன்யாசி |

www.padippakam.com

படிப்பகம்

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 8

செயன்முறை

**இசைவடிவங்கள்**

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1 | தானவர்ணம் : **நாலும் ஈரிரண்டும் தாளத்தில்** | 7 | 6 |
| 2 | கீர்த்தனைகள் (மத்திம வேகத்தில்) **ஏழன்சாப்பு, ஐந்தன்சாப்பு, ஒன்றுமிரண்டும், நாலும் ஈரிரண்டும் ஆகிய தாளங்களில்** | 15 | 14 |
| 3 | பதம் | 2 | 1 |
| 4 | ஜாவளி | 2 | 2 |
| 5 | தில்லானா | 1 | 1 |
| 6 | பஞ்சரத்தினம் | 2 | 1 |
| 7 | இராகமாலிகைக்கிருதி, கீர்த்தனை (விருத்திகள் அதிகமுள்ள) | 1 | 1 |
| 8 | சிலப்பதிகார இசைப்பாடல்கள் | 4 | 4 |
| 9 | கீழ்காலக்கிருதி | 3 | 2 |
| 10 | திவ்வியபிரபந்தம் | 2 | 2 |

11 சாபுதாளவகை இசைவடிவங்களில் ஒன்றிற்கு (பண்) ஆளத்தி பாடி, கற்பனைசுரம் 1ஆம், 2ஆம் வேகங்களில் பாடல் வேண்டும்

12 பின்வரும் பண்களில் 3 பெரும்பண்களுக்கும் 3 கிளைப்பண்களுக்கும் ஆளத்தி, கற்பனைசுரம் பாடத் தெரிந்திருக்க வேண்டும். அரிகாம்போதி, தோடி, சிம்மேந்திரமத்திமம், காபி, ஆரபி, சிறீரஞ்சனி, ஆனந்தபைரவி, ஆபோகி, கேதாரகௌள

### அறிவியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)

1. அரும்பத விளக்கம்
2. பண், பண்ணியல், திறம், திறத்திறம், பண்ணத்தி, வங்கியம், கருநாடக இசை.
3. யாழின் வளர்ச்சி, பல்வகை யாழ்கள் பற்றிய அறிவு.
4. பல்லவி என்ற பதம் ஏற்படக் காரணம்.
5. ஆரம்பப் பிரிவு தொடக்கம் 8வது பிரிவு வரையுள்ள வாய்மொழி அறிவியல் அனைத்தும்.
6. புலம்பெயர்ந்து வாழும், வாழ்ந்த தமிழீழ இசைக்கலைஞர்கள் பற்றிய அறிவு.

### துணைப்பாடம்:

1. இராகமாலிகை கீர்த்தனை 1
2. கிருதி 2
3. திருப்புகழ் 3
4. தானவர்ணம் 3
5. கீர்த்தனை 4

### இசையியல் (கேள்வித்தாள்)

1. வாச்சிய இசைப் பயிற்சியின் முக்கியத்துவமும் பயன்களும்.
2. பத்துவகை உள்ளாளங்கள்.
3. கற்றதொரு இசைவடிவம் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரை எழுதுதல்.
4. பழந்தமிழிசைப்பாக்களின் பொது அறிவு: கலித்தொகைப்பாடல்கள், சிலப்பதிகார இசைப்பாடல்கள், பரணிப்பாடல்கள், தேவாரம், திருப்புகழ்..
5. தமிழிசை வளத்திற்கு உறுதுணையாக இருந்த பழம் பெரும் நூல்களும் (தொல்காப்பியம், சிலப்பதிகாரம், பஞ்சமரபு, கருணாமிர்தசாகரம், யாழ்நூல்) அதனை இயற்றியவர்களும்.
6. பண் இலக்கணம்
   1. சௌராஷ்டிரம் 2. சாரமதி 3. ஆபேரி 4. கானடா 5. நாட்டைக் குறிஞ்சி 6. கௌரிமனோகரி 7. சாருகேசி 8. யதுகுலகாம்போதி 9. வாகதீஸ்வரி 10. நாட்டை
7. இயலிசைப்புலவர்கள் வரலாறும் இசைத் தொண்டும்
   மாணிக்கவாசகர், கோபாலகிருஷ்ணபாரதி, கனம் கிருஷ்ணய்யர், ஜெயதேவர், ஊத்துக்காடு வேங்கடசுப்பையர், தண்டபாணி தேசிகர், செல்வநாயகம் (தமிழீழம்)
8. நாகசுரம், தவில் இசை வாச்சியங்கள் பற்றிய முழு விபரம் படம் வரைந்து பாகங்களை தெளிவுபடுத்தல்
9. குரல்திரிபு அல்லது மாறுமுதல்பண் பெயர்ச்சி பற்றிய நிறையறிவு.
10. இசை கற்பதனால் உண்டாகும் பயன்கள்.
11. (அ) பண்களும் பொழுதுகளும்(ஆ) பண்களும் சுவைகளும்.
12. பண்ணிசை வரலாறும் வளர்ச்சியும்.
13. தமிழிசையின் தோற்றம் (ஏழிசைப்பெயர்கள், இசைக்குறியீடுகள், பாலைகள், ஆயப்பாலை, வட்டப்பாலை)



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

# குரல் இசை — கருவி இசை
## பருவம் 9

### செயன்முறை

**இசைவடிவங்கள்**

| | | குரல் இசை | கருவி இசை |
|---|---|---|---|
| 1 | பதவர்ணம் | | |
| 2 | மத்திம வேகக் கீர்த்தனைகள் (தமிழில் 6) | 2 | 1 |
| 3 | கிருதிகள் | 10 | 8 |
| 4 | பஞ்சரத்தினம் | 5 | 4 |
| 5 | கீழ் வேகக்கிருதிகள் | 3 | 2 |
| 6 | இராகமாலிகைக்கிருதி | 2 | 1 |
| 7 | இராகம், தானம், பல்லவி **(மூன்று வேகங்களிலும், மூன்றன் நடையிலும்)** | 2 | 1 |
| 8 | விரும்பிய பண்ணில் அமைந்த கீர்த்தனை ஒன்றிற்கு பண், நிரவல், கற்பனை சுரம் பாடுதல் | | |
| 9 | பண் மாலை விருத்தம் நான்கு இராகங்களுக்குக் குறையாமல் | 2 | 1 |
| 10 | விரும்பிய கீர்த்தனை ஒன்றை மாணவருக்கு முறையாகக் கற்பித்தல். | | |
| 11 | பார்த்துப் பாடலுக்கான இராகங்கள் மோகனகல்யாணி, ரேவதி, தர்மவதி, பவப்பிரியா, சாரங்கா. | | |
| 12 | கலித்தொகைப் பாடல்கள் | | |

### துணைப்பாடம்

| | | |
|---|---|---|
| 1. ஈரைந்தும் ஈரிரண்டும் தாளத்தில் அமைந்த வர்ணம் | 1 | 1 |
| 2. தில்லானா | 1 | 1 |
| 3. பதம் | 1 | 1 |
| 4. கீர்த்தனை | 5 | 4 |

### இசையியல் (கேள்வித்தாள்)

1. பாலை, பெரும்பண், கிளைப்பண் பொருள் விளக்கம்.
2. முதல், இணை, கிளை, நட்பு, பகை என்பவை பற்றியத் தெளிவு.
3. 22 சுருதிகள்.
4. தேசாதி, மத்யாதி தாளங்கள், 175 தாளங்கள்.
5. பண், தானம், பல்லவிபாடும் முறை முக்கால ஏறுநடை, முக்கால இறங்குநடை, முதற்பகுதி, இரண்டாம்பகுதி, அரையடிமுடிப்பு அல்லது அருதி போன்ற விபரங்களின் தெளிவு.
6. ஐரோப்பிய இசையியலின் அடிப்படைத் தத்துவங்கள்.
7. குரலிசையின் உயர் தனிச் சிறப்புக்கள் பற்றிய விரிவான அறிவு.
8. இசை மண்டபங்களின் இலக்கணம்.
9. இந்திய இசைக்கும் ஐரோப்பிய இசைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை.
10. தொன்மைகாலத்து தமிழிசைக் கலைஞர்கள் பற்றிய அறிவு.
11. இசைப்புலவர்கள் வரலாறும் தொண்டும்.
    சுவாதித்திருநாள், அருணகிரிநாதர், சேத்ரக்ஞர், இலட்சுமணப்பிள்ளை, இராமலிங்க அடிகளார், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, குமரகுருவரன், பெரியசாமிதூரன், சண்முகரெத்தினம் (தமிழீழம்).
12. இராக இலக்கணம்
    1. நீலாம்பரி 2. யமுனா கல்யாணி 3. ரீதிகவுள 4. சுப்பந்துவராளி 5. பேகட
    6. அடாணா 7. காபி 8. தேவகாந்தாரி 9. அமீர் கல்யாணி
13. இசை வாச்சியங்கள் விபரம்: கோட்டுவாச்சியம், கஞ்சிரா, கிளார்னெற்.
14. குரலிசையாளர் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளும் தவிர்க்கவேண்டிய குறைகளும்.
15. பின்வரும் இயலிசைப் புலவர்களின் இசை வடிவங்களை மதிப்பிட்டு ஒன்றுக்கொன்று உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்து ஆய்வுக் கட்டுரை வழங்கள்.
    1. முத்துத்தாண்டவர் 2. தியாகராஜர்
    3. அருணாசலக்கவிராயர் 4. புரந்தரதாசர்
    5. மாரிமுத்தாப்பிள்ளை 6. சியாமாசாஸ்த்திரி

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நாட்டியம்

## பருவம் 1 தொடக்கம் 7 வரை

படிப்பகம்

## நாட்டியம்
## பருவம் 1

**செயன்முறை**

| | |
|---|---|
| 1. தட்டடவு | 8 |
| 2. நாட்டடவு | 8 |
| 3. மர்தித அடவு | 4 |
| 4. குதித்து மெட்டடவு | 4 |
| 5. சரிகை அடவு | 4 |
| 6. குத்தடவு | 4 |

**அடவுகள் யாவும் தாளத்துடன் கொனுப்பித்தல் வேண்டும்.**

**நாட்டியயியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)**

1. நடராசர் துதி
2. அவை வணக்கமும் அதன் முக்கியத்துவமும்
3. ஒற்றைக்கை முத்திரைகள்
4. இரட்டைக் கை முத்திரைகள்
5. அழகுணர்ச்சி, பண், தாள விளக்கம்

## நாட்டியம்
## பருவம் 2

**செயன்முறை**

| | |
|---|---|
| 1. கோர்வையடவு | 6 |
| 2. மண்டியடவு | 4 |
| 3. பாய்ச்சல் அடவு | 3 |
| 4. தெய் தெய் தத்தா | 3 |
| 5. கத்தரி அடவு | 1 |
| 6. சறுக்கல் அடவு | 1 |
| 7. உற்சங்க அடவு | 1 |
| 8. தித்தித் தெய் | 2 |
| 9. தெய் தெய் தித்தித் தெய் | 1 |
| 10. தெய் தெய் தித் தித் தெய் தா | 1 |
| 11. மகுட அடவு | |

**நாட்டியயியல் (கேள்விகள் வாய்மொழி மூலம் கேட்கப்படும்)**

1. ஒற்றைக்கை முத்திரைச் செலவு 1 - 7
2. எண்ணக்கரு - நிருத்தம், நிருத்தியம், நாட்டியம், அடவு, கோர்வை.
3. அரங்க தேவதைத்துதி
4. தலை, கண், கழுத்தின் வகைகள்
5. நாட்டிய இலக்கணம்

## நாட்டியம்
## பருவம் 3

### செயன்முறை

கிடதகதரிகிடதொம், தட்டுமெட்டு அடவு, மெய்யடவு

1. அலாரிப்பு
2. ஜதிசுரம்
3. சப்தம்

### நாட்டியயியல் (கேள்வித்தாள்)

1. ஒற்றைக்கை முத்திரைச் செலவு 8 - 14
2. இரட்டைக் கை முத்திரை செலவு 1 - 12
3. தேவர்கை, பத்து அவதாரம், ஒன்பது கோள், சாதி கை வகைகள்
4. நாட்டியத் தோற்றம்
   அ - பழங்கதை வரலாறு
   ஆ - அறிவியல் வரலாறு
5. மலர்ச் சாற்று
6. நாட்டிய வரிசை முறைகள்
7. கற்றுக்கொண்ட நாட்டிய உருப்படிகளின் இலக்கணம்

**துணைப்பாடம்: (குரலிசை)**

1. சரளிவரிசைகள் அனைத்தும்
2. அணியடுக்குகளில் ஏதேனும் ஒன்றை மூன்று வேகங்களிலும் இசைத்தல்
3. இலகுகீதம் 1

## நாட்டியம்
## பருவம் 4

### செயன்முறை

1. கீர்த்தனம்
2. தில்லானா
3. பதம்
4. கவுத்துவம்
5. கொடுக்கப்பட்ட சொற்கட்டுகளுக்கு தாளம் போடுதல்.

### நாட்டியயியல் (கேள்வித்தாள்)

1. ஒற்றைக் கை முத்திரைச் செலவு 15 - 28
2. இரட்டைக் கை முத்திரைச் செலவு 13 - 24
3. ஆடுநர் அமைதிகள் (ஆடுநர் தகுதிகள், தகுதியின்மைகள்)
4. முதன்மைக் கதைமாந்தர், துணைக் கதைமாந்தர், அவை, அவைத்தலைவர், கிண்கிணி என்பவற்றின் இலக்கணங்கள்.
5. உறவுமுறைக் கைகள்
6. பாதவகை
7. நால்வகை அபிநயம்
8. சிறுகுறிப்பு:
   ஆடவர்நடனம், மகளிரின்மென்நடனம், உண்மைநிகழ்வு, போலச்செய்தல்நிகழ்வு, சொற்கட்டு, தீர்மானம், ஒத்தளவு, அலகுவகை, நடை, முத்திரை, செலவு, தாளஎழுத்து, ஐங்கணைகள்.
9. நாட்டிய உருப்படிகளின் விரிவான விளக்கம்
10. நாட்டிய நூல்களும் ஆசிரியர்களும்

**துணைப்பாடம்:**

1. ஏழும் ஒன்றும் இரண்டும் தாளத்தில் அமைந்த அணியடுக்குகள் மூன்று வேகங்களில்.
2. தாட்டு வரிசைகள் இரண்டு
3. கீதம் இரண்டு
4. இலகு தமிழ்க் கீர்த்தனை அல்லது இலகு திருப்புகழ்

www.padippakam.com

படிப்பகம்

## நாட்டியம்
## பருவம் 5

### செயன்முறை

1. வர்ணம்
2. அஷ்டபதி
3. தேவாரம்
4. ஏழன் அலாரிப்பு
5. மாணவர் ஒரு கோர்வை அமைத்தல் வேண்டும்

### நாட்டியயியல் (கேள்வித்தாள்)

1. குறிப்பு வகை
   அழகுணர்ச்சி, துணைப்புலப்பாடு, ஸ்தாயி பாவம், முகபாவம்
2. சுவைப்புலப்பாடு
3. காதற்சுவையும் அதன் வகைகளும்
4. நாயகன் இலக்கணம், நாயகனின் தோழன் இலக்கணங்கள்
5. எண்வகை நாயகி
6. தோழி
7. அலகுவின் 5 வகைகளும், அதனால் ஏற்படும் 35 தாளங்களும்
8. இயலிசைப் புலவர்களின் வரலாறு
   தஞ்சை நால்வர், பந்தணை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

### துணைப்பாடம்

1. ஜதிசுரம் அல்லது சுரஜதி 1
2. இலக்கணகீதம் 3
3. கீர்த்தனை ஒன்றுமிரண்டும், நாலும் ஈரிரண்டும் தாளங்களில் 2
4. தானவர்ணம் 1

## நாட்டியம்
## பருவம் 6

### செயன்முறை

1. மலர்ச் சாற்று
2. ஜதிசுரம்
3. ஜாவளி
4. கீர்த்தனம்
5. பதம்
6. தோடயமங்களம்
7. திருப்புகழ்
8. ஜவகை ததீங்கிணதோம்

### நாட்டியயியல் (கேள்வித்தாள்)

1. நாட்டார் நடனமும் அதன் இலக்கணங்களும்
2. இந்திய மரபுச் செவ்வியல் நடனவகைகளும்
3. இயலிசைப் புலவர்கள்
   அ. ஏரம்பு சுப்பையா, பாலசரஸ்வதி, ருக்மணி அருண்டேல்
4. நாட்டுக் கூத்து
5. தஞ்சை க. பொன்னையாபிள்ளை.

### துணைப்பாடம்:

1. கிருதி 2
2. திருப்புகழ் 3
3. தானவர்ணம் 3
4. கீர்த்தனை 4
5. இராகமாலிகை கீர்த்தனை 1

www.padippakam.com

படிப்பகம்

# நாட்டியம்
## பருவம் 7

### செயன்முறை

1. வர்ணம்
2. தில்லானா
3. ஐந்தன் அலாரிப்பு
   விருத்தம், சமசுக்கிருதவிருத்தம், பிள்ளைத்தமிழ்
4. கொடுக்கப்படும் பாடலுக்கு மெய்ப்பாடமைத்தல்
5. நாட்டார் நடனம்
6. ஒன்பான் சுவைகளின் மெய்ப்பாடு
   *மேலே குறிப்பிட்ட 4, 5, 6, இவை மூன்றில் ஒன்றைத் தயார்படுத்தல்*

### நாட்டியயியல்

1. இந்தியச் செவ்வியல் நடனங்கள் கதக், ஒடிசி, குச்சுப்பிடி.
2. அரங்கத்தை அணிசெய் கருவிகள், நாட்டியத்தில் எடுத்துக் கொள்ளும் பங்கு.
3. நாட்டிய நாடகமும், அதன் இலக்கணமும்.
4. பரதக்கலை மறுமலர்ச்சி.
5. இலங்கையில் நாட்டிய வளர்ச்சி.
6. காவடிச்சிந்து, தெம்மாங்கு, கதாகாலாட்சேபம், நொண்டிச் சிந்து,
   வில்லுப்பாட்டு இவை பற்றிய அறிவு.
7. சமய விழாக்களில் நாட்டிய வகைகள்.
8. கிழக்கத்திய மேற்கத்திய நாட்டியவகைகள்.
9. நாட்டிய அரங்க இலக்கணம்.
10. ஒப்பனைக்கலை.
11. உடல், உள ஆன்மீக மனவளர்ச்சிக்கும், பரத நாட்டியத்திற்கும் இடையிலுள்ள தொடர்பு.
12. அழகியல் கல்வி.
13. இயலிசைப் புலவர்.
    ஆனந்த குமாரசுவாமி, தண்டாயுதபாணி, இராமையாபிள்ளை.
14. நடன நிறுவனங்களின் நாட்டியப்பணி
    இராமநாதன் அக்கடமி, இந்திய அக்கடமி, கலாசேத்திரா.

### துணைப்பாடம்

| | | |
|---|---|---|
| 1. ஈரைந்தும் ஈரிரண்டும் தாளத்தில் அமைந்த வர்ணம் | 1 | 1 |
| 2. தில்லானா | 1 | 1 |
| 3. பதம் | 1 | 1 |
| 4. கீர்த்தனை | 5 | 4 |

### நடனயியல் (கேள்வித்தாள்)

1. நடன ஆசிரியர்களுக்கு அமைந்திருக்க வேண்டி இலக்கணங்களும், பொறுப்புகளும், கடமைகளும்.
2. மாணவர்களுக்குரிய இலக்கணம்.
3. ஒவ்வொரு வகுப்புக்குரிய பாடக்குறிப்பு தயாரித்தல்.
4. பிள்ளைகளுக்கு நாட்டியத்தில் உள்ள ஆர்வத்தை உளவியல் முறையில் கண்டறிதல்.
5. கலை ஞானமுள்ள பிள்ளைகளுக்கு நாட்டியம் பயிலுவதில் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குவதற்கு, நாட்டிய ஆசிரியர் உளவியல் முறையில் கொள்ள வேண்டிய வழி வகைகள்.
6. உடற்சீர்மையின்மை, முகக்குறிப்புத்திறமின்மை இவைக்குரிய காரணங்களும், அவற்றை சீர்படுத்தும் முறையும்.
7. வகுப்பின் தரத்திற்கேற்ப உருப்படிகளைத் தெரிந்தெடுக்கும் முறையும், கற்பிக்கும் முறையும்.
8. தேர்வுகள் ஆயத்தப்படுத்தல்.
9. நாட்டிய வகுப்புக்கான துணைக் கருவிகள், நாட்டிய வகுப்பு அமைப்பு.
10. கட்புல, செவிப்புல ஊடகங்கள், தொடர்பலை, வானொலி, தொலைக்காட்சி மூலம் நாட்டியக்கலையை வளர்த்தல்.
11. நட்டுவாங்கப் பயிற்சி.
12. பாடும் கருவிகளை கையாளும் முறை.

### கற்றுக்கொடுக்கும் முறை

மாணவர் ஒருவருக்கு பருவம் 1 தொடக்கம் பருவம் 3 வரையிலான பாடத்திட்டத்திற்கமைய வகுப்பு ஒன்றை 45 நிமிடத்துக்கு தேர்வாளருக்கு முன்பாகக் கற்றுக்கொடுத்தல்.

www.padippakam.com

# வாச்சியம்

## பருவம் 1 தொடக்கம் 8 வரை

படிப்பகம்

## தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 1

**செயன்முறை**

1. தா - தீ - தொம் - நம் ஆறுவிதங்கள் (மூன்று வேகங்களில்)
2. தா - கிட தொடக்கம் தரிகிட வரையுள்ள பன்னிரண்டு வகைகள் (மூன்று வேகங்களில்)
3. 16 அசைகள் கொண்ட சிறிய பரண் நாலும் ஈரிரண்டும் தாளத்தில் (முதலாம் இரண்டாம் வேகங்களில்)
4. 32 அசைகள் கொண்ட பெரிய பரண் நாலும் ஈரிரண்டும் தாளத்தில் (முதலாம் இரண்டாம் வேகங்களில்)
5. 24 அசைகள் கொண்ட பெரிய பரண் ஒன்றுமிரண்டும் தாளத்தில் (முதலாம் இரண்டாம் வேகங்களில்)
6. ஏழு தாளங்களில் ஏதாவது ஒரு தாளத்தை கையில் சரியாக போட்டுக் காட்டவும்.

## தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 2

**செயன்முறை**

1. தீ தகஜெனு தாம் பயிற்சி நாலும் ஈரிரண்டும் தாளத்தில் வட்டணைகள் கொண்டது (மூன்று வேகங்களில்)
2. 24 அசை பெரிய பரண் ஒன்றுமிரண்டும் தாளத்தில்
3. தனிமுழக்கு - நாலும் ஈரிரண்டும் தாளத்தில் (5 நிமிடத்திற்கு)
4. வட்டணை கொண்ட தகஜெனு - தாம் பயிற்சி (முதலாம் இரண்டாம் வேகத்தில்)
5. வட்டணைப் பாடங்கள் ஒன்றுமிரண்டும் (முதலாம் இரண்டாம் வேகத்தில்)
6. ஏழும் ஒன்றும் இரண்டும் தாளம், மூன்றும் ஈரிரண்டும் தாளம், நாலுமிரண்டும் நாலும் தாளம் போன்ற தாளங்களில் ஏதாவது விரும்பிய ஒரு தாளத்தில் ஜதியோடு மூன்று வேகங்களிலும் கையில் தாளம் போட்டுச் சொல்லிக்காட்டல்.

# தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 3

### செயன்முறை

1. தனிமுழக்கு - ஒன்றும் இரண்டும் தாளத்தில் (5 நிமிடங்களுக்கு)
2. ஐவகை ததிங்கிணதொம் வரிகளை சம இடத்திற்கு நாலும் ஈரிரண்டும் தாளத்தில் வாசித்துக் காட்டல்.
3. 28 அசைகள் கொண்ட பெரிய பரண் முழக்கு (ஏழன்சாப்பு தாளத்தில் - முதலாம் இரண்டாம் வேகங்ளில்)
4. 14 அசைகள் கொண்ட சிறிய பரண் முழக்கு (ஏழன்சாப்பு தாளத்தில் - முதலாம் இரண்டாம் வேகங்களில்)

### துணைப்பாடம்: (குரலிசை)

1. சரளிவரிசைகள் அனைத்தும்
2. அணியடுக்குகளில் ஏதேனும் ஒன்றை மூன்று வேகங்களிலும் இசைத்தல்
3. இலகுகீதம் 1

### தாளயியல் (கேள்வித்தாள்)

1. சிறுகுறிப்பு: தாளம், ஒத்தளவு.
2. ஏழு தாளங்களின் பெயர், அவற்றின் தாளச் சீர்களுடன் காட்டும் அட்டவணை.
3. பின்வரும் குறியீடுகளின் பொருண்மைகளின் விளக்கம்

   1. ,
   2. ;
   3. |
   4. ||
   5. -
   6. =
   7. —
   8. +
   9. *

4. அசைவகை, அலகுவகை, நடை என்றால் என்ன? என்பதன் விளக்கம்.
5. அரைத்துரிதம், துரிதம், அலகு, நீட்டல், புலிதம், புள்ளடி போன்றவற்றின் விளக்கம்

www.padippakam.com

# தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 4

### செயன்முறை

1. தனிமுழக்கு ஐந்தன்சாப்பு தாளத்தில் 5 நிமிடத்திற்கு வாசித்துக் காட்டல்.
2. ஐவகை ததிங்கிணதொம் வரிசைகளை ஒன்றுமிரண்டும் தாளத்தில் வாசித்துக் காட்டல்.
3. நாலும் ஈரிரண்டும் தாளத்தில் சம இடத்திற்கு ஏதாவது ஒரு ததிங்கிணதொம் பாடத்தை நாலன் நடைக்கு வாசித்து அதை மூன்றன்நடைக்கு மாற்றி வாசித்துக் காட்டல்.
4. நாலும் ஈரிரண்டும் தாளத்தில் சம இடத்திற்கு முறையே நாலன், மூன்றன், ஐந்தன், ஏழன், ஒன்பான் நடைகளை வாசித்துக் காட்டல்.

### துணைப்பாடம்:

1. ஏழும் ஒன்றும் இரண்டும் தாளத்தில் அமைந்த அணியடுக்குகள் மூன்று வேகங்களில்.
2. தாட்டு வரிசைகள் இரண்டு
3. கீதம் இரண்டு
4. இலகு தமிழ்க் கீர்த்தனை அல்லது இலகு திருப்புகழ்

### தாளயியல் (கேள்வித்தாள்)

1. சுருதி, இன்னொலி, ஒத்தளவு, வட்டணை என்பவற்றின் பொருள் விளக்கம்.
2. <u>சிறுகுறிப்பு</u>: முழவு, தண்ணுமை, மத்தளம், மதங்கம், மிருதங்கம்.

$|_3 \, |_3 \, O_2 \, O_2$

$|_9 \cup_1 O_2$

$|_9 \, O_2 \, |_9 \, |_9$

$|_9 \, O_2 \, O_2$

$O_2 \, |_4$

3. மேலே குறிப்பிட்டுள்ள தாள உறுப்புகளைக் கொண்டு அத்தாளத்தின் பெயர்களையும், மொத்த எண்ணிக்கைகளையும் எழுதவும்
4. மிருதங்கத்தின் இடந்தலை (தொப்பி) எந்த சுருதியில் கேட்க வேண்டும்?
5. ஏழுதாளங்கள் பற்றிய பொருள் விளக்கமும் சிறுகுறிப்பும்.

www.padippakam.com

படிப்பகம்

# தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 5

### செயன்முறை

1. நாலும் ஈரிரண்டும் தாளத்தில் இரட்டைக்களையில் (5 நிமிடம்) தனிமுழக்கு (சம இடத்தில்) வாசித்துக் காட்டல்.

2. நாலும் ஈரிரண்டும், ஒன்றும் இரண்டும், ஐந்தன் சாப்பு போன்ற தாளங்களில் சிறிது நேரம் தனிமுழக்கு வாசித்து ஐவகை, ததிங்கிணதொம் வரிசைகளை வாசித்துக்காட்டல்.

3. ஐந்தும் ஈரிரண்டும், மூன்றும் ஈரிரண்டும் போன்ற தாளங்களில் முடிவு மோராவும் ததீங்கிணதொம்மும் வாசித்துக்காட்டல்.

4. ஏழுதாள அணியடுக்குச் சொற்கட்டுகளை மூன்றுவேகங்களிலும், மூன்றன் நடையிலும் வாசித்துக் காட்டல்.

### துணைப்பாடம்

1. ஜதிசுரம் அல்லது சுரஜதி 1
2. இலக்கணகீதம் 3
3. கீர்த்தனை ஒன்றுமிரண்டும், நாலும் ஈரிரண்டும் தாளங்களில் 2
4. தானவர்ணம் 1

### தாளயியல் (கேள்வித்தாள்)

1. திருப்புகழ்ப் பாடல்களின் தாளச் சிறப்புகள்.

2. சமஇடம், முன்னர்இடம், பின்னர் இடம் என்பனவற்றின் பொருள் விளக்கம் எடுத்துக்காட்டுகளுடன்.

3. தில்லானா, சூளாதி, பதம், கீர்த்தனங்களைப் பற்றிய வடிவிலக்கணம்.

4. மிருதங்கத்திற்கு கரணை போடும் விதம் பற்றிய விளக்கம்.

5. தபேலா, தவில், கடம், கஞ்சிரா, உடுக்கு, செண்டை, டொலக் போன்ற வாச்சியங்களைப் பற்றிய விளக்கம்.

6. சாப்புத்தாளம் என்பதன் பொருள் விளக்கம். மூன்றன்சாப்பு, ஐந்தன்சாப்பு, ஏழன்சாப்பு, ஒன்பான்சாப்பு போன்றவற்றின் சிறுகுறிப்பு வரைவு.

www.padippakam.com

படிப்பகம்

# தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 6

**செயன்முறை**

1. ஏழன்சாப்பு தாளத்தில் சம இடத்திற்கு (5 நிமிடம்) தனிமுழக்கு வாசித்துக் காட்டல்.

2. ஏழன்சாப்பு, ஐந்தன்சாப்பு தாளங்களில் சம எடுப்புக்கு தனிமுழக்கு வாசித்தலும், ஐவகை ததிங்கிணதொம் வாசித்தலும்.

3. நாலும் ஈரிரண்டும், ஒன்றும் இரண்டும், ஐந்தன்சாப்பு, ஏழன்சாப்பு, ஐந்தும் ஈரிரண்டும் போன்ற தாளங்களில் முடிவு மோராவையும், முடிவு ததிங்கிணதொம் ஆகியவற்றை வாசித்துக்காட்டல்.

4. நாலும் ஈரிரண்டும் மூன்றன்நடையில் சம இடத்திற்கு முடிவு மோராவும், முடிவு ததிங்கிணதொமும் வாசித்துக் காட்டல்.

**துணைப்பாடம்:**

1. கிருதி 2
2. திருப்புகழ் 3
3. தானவர்ணம் 3
4. கீர்த்தனை 4
5. இராகமாலிகை கீர்த்தனை 1

**தாளயியல் (கேள்வித்தாள்)**

1. முக்கால ஏறுநடை, முக்கால இறங்குநடை என்பவற்றின் பொருண்மைகளைக் கூறுக.
2. மிருதங்கத்தின் வரலாற்றினை விளக்கி எழுதுக.
3. மிருதங்கத்தில் சுருதி சேர்க்கும் விதம் விளக்கமாக எழுதுக.
4. சமக்கோலம், சமமற்றக்கோலம், மத்தளக்கோலம், உடுக்கைக்கோலம், முரசுக்கோலம், கோபுரக்கோலம் போன்ற இசைக்கோலங்களை விளக்கி எழுதுக.
5. நாட்டார் பாடல், கதாகாலசேபம், நாட்டியம், நாட்டுக்கூத்து, மெல்லிசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை போன்ற நிகழ்ச்சிகளில் வழங்கும் தாளவாச்சியங்கள் பற்றிய விளக்கம் தருக.
6. மிருதங்க வாச்சியத்தின் அமைப்பைப் படம் வரைந்து அதன் தனித்துவத்தையும் பயன்பாட்டையும் விளக்கி எழுதுக.
7. தேசாதி, மத்தியாதிதாளங்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

# தாளவாச்சியக்கருவிகள்
# பருவம் 7

## செயன்முறை

1. நாலும் ஈரிரண்டும் இரட்டைக்களையில் 3/4 இடத்தில் பாடும் பாட்டுக்கு வாசித்தலும் அதே இடத்திற்கு தொடர்ந்து 5 நிமிட தனிமுழக்கு வாசித்தல்.

2. பாடப்படும் வர்ணம், தில்லானா, திருப்புகழ், தேவாரம் போன்ற உருப்படிகளுக்குப் பொருந்த மிருதங்கம் வாசித்தல்.

3. பாடப்படும் கற்பனை சுரங்களுக்கு ஏற்றாற் போல கையில் மிருதங்க சொற்கட்டுகள் கொனிப்பித்தும், கையில் தாளம்போட்டு சொல்லி வாசித்தும் காட்டல்.

4. ஐந்தும் ஈரிரண்டும் தாளத்தில் ஐவகை ததீங்கிணதொம் வரிசைகளை வாசித்தல்.

**துணைப்பாடம்:**

| | |
|---|---|
| 1. இராகமாலிகை கீர்த்தனை | 1 |
| 2. கிருதி | 2 |
| 3. திருப்புகழ் | 3 |
| 4. தானவர்ணம் | 3 |
| 5. கீர்த்தனை | 4 |

## தாளயியல் (கேள்வித்தாள்)

1. சிறுகுறிப்பு வரைக: தீர்மானம், முத்தாய்ப்பு, கோர்வை, மோரா, குறைப்பு.
2. 35 தாளவகை அட்டவணை ஒன்றைத் தயாரித்தல்.
3. வாய்ப்பாட்டு இசை, வாச்சிய இசை, பண்ணிசை, மெல்லிசை, நாட்டியம், பஜனை, நாடகம் போன்றவற்றிற்கு மிருதங்கம் வாசிக்கும் முறைகள்.
4. கர்நாடக இசைக்கும், இந்துஸ்தானிய இசைக்குமிடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள்.
5. கர்நாடக இசையிலும், இந்துஸ்தானி இசையிலும் வழங்கும் வாச்சியங்கள்பற்றிய அறிவு.
6. கஞ்சிராவின் அமைப்பும் அதன் பக்கமேளப் பங்களிப்பும்.
7. கடம் என்னும் வாச்சியத்தின் அமைப்பும் இசை நிகழ்ச்சியில் அதன் பங்களிப்பும்.
8. நாலும் ஈரிரண்டும் தாளத்தில் அமைந்த ஒரு கீர்த்தனையை சுரதாளக் குறியீடுகளோடு எழுதிக்காட்டல்.

www.padippakam.com

படிப்பகம்

# தாளவாச்சியக்கருவிகள்
## பருவம் 8

### செயன்முறை

1. மூன்றும் ஈரிரண்டும் தாளத்தில் ஐவகைகளுக்கும் (மூன்றும் ஈரிரண்டும், நான்கும் ஈரிரண்டும், ஐந்தும் ஈரிரண்டும், ஏழும் ஈரிரண்டும், ஒன்பதும் ஈரிரண்டும்) சம இடத்திற்கு 5 நிமிட தனிமுழக்கு வாசித்தல்.

2. நாலன் ஈரிரண்டும், ஒன்றுமிரண்டும், ஐந்தன்சாப்பு, ஏழன்சாப்பு, ஐந்தும் ஈரிரண்டும், ஒன்றும் இரண்டும் (இரட்டைக்களைச்சவுக்கம்) போன்ற தாளங்களில் பாடும் உருப்படிகளுக்கு மிருதங்கம் வாசித்தல்.

3. இரட்டைக்களையில் ஒன்றுமிரண்டும், ஐந்தன்சாப்பு, ஏழன்சாப்பு, மூன்றுமிரண்டும் அதன் நால்வகைகளிலும் ஐவகை ததிங்கிணதொம் வரிசைகளை வாசித்துக் காட்டல்.

4. நாலும் ஈரிரண்டும் தாளத்தில் சம இடத்திற்கு ஐந்தன் நடைகளை தனித்தனியாக வாசித்து அதே இடங்களுக்கு ஐந்தன் ததீங்கிணதொம் வரிசைகளை வாசித்துக் காட்டுதல்.

### துணைப்பாடம்

| | | |
|---|---|---|
| 1. ஈரைந்தும் ஈரிரண்டும் தாளத்தில் அமைந்த வர்ணம் | 1 | 1 |
| 2. தில்லானா | 1 | 1 |
| 3. பதம் | 1 | 1 |
| 4. கீர்த்தனை | 5 | 4 |

### தாளயியல் (கேள்வித்தாள்)

1. முக்கால ஏறுநடை, முக்கால இறங்குநடை: பொருள் விளக்கம் தருக.
2. சிறுகுறிப்பு எழுதுக: துள்ளல், பரண், நடை, கதி, அறுதி
3. பக்கமேள வாசிப்பில், அ) ஒரு பாட்டுக்கு அதன் நடையை வாசித்தல் ஆ) அப்பாட்டையே சொற்கட்டாக்கி வாசித்தல், இவ்விரு முறைகளில் சிறந்ததெது? ஏன்? என்ற விளக்கம்.
4. தாளவாச்சியங்களைக் கற்பதால் உண்டாகும் பயன்கள்.
5. கட வாச்சியத்தின் அமைப்பை விளக்கி அதன் பக்கமேளச் சிறப்பின் விளக்கம்.
6. ஒரு பாட்டிற்கு வாசிக்கப்படும் தனிமுழக்கின் தீர்மானத்தை சொற்கட்டுக்களாலும் தாள இசைக் குறியீடுகளாலும் எழுதிக்காட்டல்.
7. நாட்டுப்புற பாடல்கள், மெல்லிசைப் பாடல்கள்போன்றவற்றில் தாள இசைச் சிறப்பினைப் பற்றி சிறுகட்டுரை வரைதல்.
8. பின்வரும் மிருதங்கவித்துவான்களில் யாராவது ஒருவரின் வரலாற்றையும் அவருடைய இசைத் தொண்டு பற்றி அறிந்திருத்தல்.
   1. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மிருதங்கவித்துவான் திரு தம்பாபிள்ளை இரட்ணம்
   2. தஞ்சாவூர் - தாசுசுவாமிகள்

### கற்றுக்கொடுக்கும் முறை

மாணவர் ஒருவருக்கு பருவம் 1 தொடக்கம் பருவம் 3 வரையிலான பாடத்திட்டத்திற்கமைய வகுப்பு ஒன்றை 45 நிமிடத்துக்கு தேர்வாளருக்கு முன்பாக கற்றுக்கொடுத்தல்.

www.padippakam.com

படிப்பகம்

# இசை
## தமிழ்மொழிச் சொற்களுக்கான சமசுகிருதச்சொற்கள்

| தமிழ் | சமசுகிருதம் |
|---|---|
| அலகு | லகு |
| அணியடுக்கு | அலங்காரம் |
| அறுசுரப்பண் | ஷாடவம் |
| அயல்சுரம் | அன்னிய சுரம் |
| அரைச் சுரம் | கோமளச்சுரம் |
| அறுசீர்கள் | ஷடாங்கம் |
| அனைத்துசுரநிறுத்தப்பண் | சர்வசுர நியாச இராகம் |
| அருகிசைப்பண் | அல்ப இராகம் |
| அரையடிமுடிப்பு அல்லது அருதி | பதகர்ப்பம் |
| அசை | அட்சரம் |
| அசைவகை | ஜதிபேதம் |
| அலகுவகை | ஜாதிபேதம் |
| அரைத்துரிதம் | அனுத்ருதம் |
| அலகு | லகு |
| இறங்குநிரல் | அவரோகணம் |
| இன்னொலி | நாதம் |
| இலகுகீதம் | சஞ்சாரிகீதம் |
| இரட்டைவரிசைகள் | ஜண்டை வரிசைகள் |
| இலக்கணகீதம் | லக்ஷணகீதம் |
| இசை | சங்கீதம் |
| இயலும் இசையும் | தாதுமாது |
| இடைவிட்ட பண் | வர்ஜ இராகம் |
| இரண்டாம்பகுதி | துவிதியாங்கம் |
| எடுப்பு | கிரகம் |
| ஏறுநிரல் | ஆரோகணம் |
| ஏழன்நடை | மிஸ்ரநடை |
| ஏழன்சாப்பு | மிஸ்ரசாப்பு |
| ஒத்தளவு | லயம் |
| உடுக்கைக்கோலம் | தமதுகயதி |
| உள்ளாளச்சுரம் | கமகச்சுரம் |
| உள்ளாளம்குறைந்தபண் | கம்பவிகீனராகம் |
| ஐஞ்சுரப்பண் | ஔடவம் |
| ஐந்தன்சாப்பு | கண்டசாப்பு |
| ஐந்தன்நடை | கண்டநடை |
| கதம்பகப்பண் | மிஸ்ரராகம் |
| கம்பிதப்பண் | முத்தாங்க இராகம் |
| கிளைப்பண் | ஜன்னியராகம் |
| கோபுரக்கோலம் | சுரோத்தவகயதி |
| சரளிவரிசைகள் | ஸ்வராவளி |
| சமஇடம் | சமக்கிரகம் |
| சம எடுப்பு | சமக்ரகம் |
| சமமற்ற எடுப்பு | விசமக்ரகம் |
| சமக்கோலம் | பிபீலிகயதி |
| சமமற்றக்கோலம் | விசமயதி |
| சிறப்புத்தொடுவை | விசேஷசஞ்சாரம் |
| சுரத்தானம் | சுரஸ்தானம் |
| சுருதி | ஸ்சுருதி |
| சொற்கட்டு | ஜதி |

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| நட்புப்பண் | மித்திர இராகம் |
| *"நி"* சுரமுடிவுப்பண் | நிஷாதாந்திய ராகம் |
| நிறைப்பண் | சம்பூரண இராகம் |
| நாற்சுரப்பண் | ஸ்வராந்தரம் |
| நாலன்நடை | சதுஸ்ரநடை |
| நிறைச்சுரம் | தீவிர சுரம் |
| நீட்டல் | குரு |
| நீள்கம்பிதச்சுரம் | தீர்க்கம்பித சுரம் |
| | |
| *"த"* சுரமுடிவுப்பண் | தைவதாந்திய ராகம் |
| தனிமுழக்கு | தனி ஆவர்த்தனம் |
| தனிச்சாயல்ப்பண் | சுத்த இராகம் |
| தாள அசை | தாள அட்சரம் |
| தாளச்சீர்கள் | தாள அங்கங்கள் |
| தாள இயக்குமுறை *(தாளம்போடும் முறை)* | தாளக்கிரியை |
| தாழ்சுருதி | தக்கு சுருதி |
| திருப்பு | விசர்ஜிதம் |
| துள்ளல் | டேக்கா |
| துணைப்பல்லவி | உபபல்லவி |
| துரிதம் | த்ருதம் |
| துரிதவேகம் (மூன்றாம் வேகம்) | துரித காலம் |
| தொடுவை | சஞ்சாரம் |
| | |
| *"ப"* சுரமுடிவுப்பண் | பஞ்சமாந்திய ராகம் |
| பத்துவகை உள்ளாளங்கள் | தசவித கமகங்கள் |
| பண் | இராகம் |
| பண்ணுப்பெயர்ச்சி (குரல் திரிபு) | கிரகபேதம் |
| பின்னர்பாகம் | உத்தராங்கம் |
| பின்னர் எடுப்பு | அநாகதக்ரகம் |
| பிறவரல்பண் | பாஷாங்க இராகம் |
| பிறழ்பண் | வக்ரராகம் |
| பிறவரல் பண் | பாஷங்க இராகம் |
| பிறழ்சுரம் | வக்ர சுரம் |
| பிறழ்முடிபுச் சுரம் | வக்ராந்திய சுரம் |
| பிறைப்பண் | அசம்பூரண இராகம் |
| புலிதம் | ப்லுதம் |
| புள்ளடி | காக்கபாதம் |
| பெரும்பண் | ஜனகராகம் |
| பெரும்பயன்சுரம் | பகுத்துவ சுரம் |
| | |
| மத்திமவேகம் (இரண்டாம் வேகம்) | மத்திம காலம் |
| மத்தளக்கோலம் | மிருதங்கயதி |
| மண்டிலம் | ஸ்தாயி |
| மித கம்பிதப்பண் | அர்த்த கம்பித இராகம் |
| முதற்பகுதி | பிரதமாங்கம் |
| முத்தாயிசுரம் | முக்தாயிஸ்வரம் |
| மூன்றன்நடை | திஸ்ரநடை |
| மூன்றன்சாப்பு | திஸ்ரசாப் |
| முன்னர்பாகம் | பூர்வாங்கம் |
| முன்னர் எடுப்பு | அதீதக்ரகம் |
| முப்பொழுதுப்பண் | சர்வகாலிக ராகம் |
| முரசுக்கோலம் | கோபுச்சயதி |
| மூவேக ஏறுநடை | அநுலோமம் |
| மூவேக இறங்குநடை | பிரதிலோமம் |
| மென்சுரம் | துர்பலசுரம் |
| | |
| வலிவுமண்டிலவரிசைகள் | மேல்ஸ்தாயி வரிசைகள் |
| வட்டணை | ஆவர்த்தனம் |
| வகைபெறா | ப்ரக்ருதி |
| வகைபெறும் | விக்ருதி |
| வழக்கிழந்த தொடுவை | ஆர்ஷபிரயோகம் |
| வாச்சியம் | வாத்தியம் |
| விருத்தி | சங்கதி |



படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| விளம்பவேகம் (முதல் வேகம்) | சௌககாலம் |
| வேகநெறி | காலப்பிரமாணம் |
| வைகறைப்பண் | உதயராகம் |
| 10 வகை இயக்கங்கள் | தசப்பிராணங்கள் |

## நாட்டியம்
## தமிழ்மொழிச் சொற்களுக்கான சமசுகிருதச்சொற்கள்

| தமிழ் | சமசுகிருதம் |
|---|---|
| அறிவியல் வரலாறு | சாஸ்திரியச் சரித்திரம் |
| அழகுணர்ச்சி | பாவம் |
| அரங்க தேவதைத்துதி | அரங்க தேவதாஸ்துதி |
| அவை | சபை |
| ஆடலிறைத் துதி | த்யான ஸ்லோகம் |
| ஆடுநர் அமைதிகள் | பாத்திரப் பிராணன்கள் |
| இலக்கணம் | இலஷ்ணம் |
| உறவுமுறைக் கைகள் | பாந்தவ்ய ஹஸ்தம் |
| உண்மைநிகழ்வு | லோகதர்மி |
| எண்வகை நாயகி | அஸ்ட வித நாயகி |
| ஒன்பது கோள் | நவக்கிரகம் |
| ஒன்பான் சுவை மெய்ப்பாடு | நவரஸங்களின் அபிநயம் |
| ஐந்தன் அலாரிப்பு | கண்ட அலாரிப்பு |
| ஐங்கணைகள் | பஞ்சபாணங்கள் |
| கண் | த்ருஷ்டி |
| கழுத்து | கிரீவா |
| கதைமாந்தர் குணங்கள் | பாத்திரம் |
| கதைமாந்தர் குற்றங்கள் | அபாத்திரம் |
| காதற்சுவை | சிருங்காரம் |
| சாதி கை வகைகள் | ஜாதி ஹஸ்தங்கள் |
| சுவைப்புலப்பாடு | ரஸப்பிரகடனம் |
| சொற்கட்டு | ஜதி |
| செலவு | விநியோகம் |
| தலை | சிரஸ் |
| தாளஎழுத்து | அட்சலகாலம் |
| துணைப்புலப்பாடு | அநுபாவம் |
| தேவர்கை | தேவஹஸ்தம் |
| தோழன் | சகா |
| தோழி | சகி |
| நடை | கதி |
| பத்துப்பிறப்பு | தஸாவதாரம் |
| பழங்கதை வரலாறு | புராணச் சரித்திரம் |
| போலச்செய்தல்நிகழ்வு | நாட்டியதர்மி |
| மகளிர்மென்நடனம் | லாஸ்யம் |
| மலர்ச்சாற்று | புஸ்பாஞ்சலி |
| மரபுச் செவ்வியல் | சாஸ்திரியம் |
| மனவளர்ச்சி | மனோவளர்ச்சி |
| முகக்குறிப்பு | சாத்வீக பாவம் |
| வணக்கம் | நமஸ்காரம் |

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

2000ஆம் ஆண்டிலிருந்து கலையத்திற்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுவந்த இப்பாடத்திட்டத்தினை வெளிவாரி மாணவர்களும் பயன்படுத்திக்கொள்ள விருப்பம் தெரிவித்தமையால் அவர்களது கல்வி நலனையும் கவனத்திற் கொண்டு இப்பாடத்திட்டத்தினை வெளியீடு செய்கின்றோம்.

பதிப்புரிமை தமிழர் கலையகம்
டோர்ட்முண்ட் - யேர்மனி
வெளியீடு: 06.04.2002

தொடர்புகளுக்கு:

THAMILAR KALAIYAGAM
Rheinische Str. 130
44147 Dortmund
Germany

அல்லது

THAMILAR KALAIYAGAM
Postfach 103925
44039 Dortmund
Germany

Tele: 0231 14 74 33
Fax: 0231 14 36 47
www.kalaiyagam.com

படிப்பகம்